ஆரணியில் திரண்டது ஆர்வ வெள்ளம்

Phone No 4502

விலை அரை அணா

Regd. No. M. 5458

இலங்கை 5 சதம்

மாலை மணி

ஆசிரியர்: C. N. அண்ணாதுரை M.A.

MALAIMANI

(திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ்)

மலர் 1] சென்னை (26—6—50) வெளியீடு (27—6—50) [இதழ் 288

—(0)—

வ. ஆ. மாவட்ட மாநாட்டில் பல்லாயிரக்கணக்கில் திரண்டனர் திராவிடர்

—(0)—

ஊரெங்கும் உற்சாகம்; இளைஞர்களிடையே புத்துணர்ச்சி

—(0)—

இந்தி ஏகாதிபத்தியத்துக்குக் கண்டனம்

—(0)—

ஆரணி மாநாட்டு நிகழ்ச்சிகள்

ஆரணி, ஜூன் 24—

வட ஆர்க்காடு மாவட்ட திராவிட முன்னேற்றக் கழக முதல் மாநாடு வாழ்த்தொலி முழங்க, வெற்றிக் கீதம் இசைக்க, சீரும் சிறப்பும் பெற பொலிவுடன் இன்று காலை 10-மணிக்கு ஆரம்பமாயிற்று.

இடிந்த பழையகோட்டைச் சுவர்—அதனை அடுத்து ஆழ்ந்துகிடக்கும் அகழ்—அதனை அடுத்து போர்வீரர்கள் நிற்கும் பாழடைந்த படை தளம்—இவற்றிற்கு அப்பால் அகன்ற வெளி—அதிலே கட்டடங்கள்தோறும் பெருமிதத்தோடு அசைந்தாடும் இருவண்ணக் கொடிகளை ஏந்திய அழகிய பந்தல். பந்தல் பந்தலாகமட்டும் காட்சியளிக்கவில்லை வீரர்கள் குழுமும் பாசறையாகக் காட்சியளித்தது. வானுற உயர்ந்தாடிக் கொண்டிருக்கும் இருவண்ணக்கொடிகள் போவோர் வருவோரை "வருக, வந்து களிக்க, கடமையாற்றுக" என்று இரு கை நீட்டி மாநாட்டை அழைப்பதுபோல், அழகுறக் காணப்பட்டன. வண்ணக்காகித மாலைகளும், கொடித்தோரணங்களும் பந்தலின் அழகை மிகுதிபடுத்திநின்றன. மாநாட்டின் பந்தலுக்கு வரும் வாயில்களெல்லாம், வழிகளெல்லாம் பொன்னுரை பொறிக்கப்பட்ட வளைவுகள் நிலைநாட்டப்பட்டிருந்தன. ஆரணி மக்களின் காதையும், கவனத்தையும் ஈர்க்கும் தன்மையில் ஒலிபெருக்கி நாலா பக்கங்களிலும் ஒலியைப் பரப்பிக்கொண்டிருந்தது.

மாநாட்டின் பந்தலின் உள்ளும் காலை 8 மணியிலிருந்தே ஏராளமான மக்கள் குழுமியிருக்கத் தொடங்கிவிட்டார்கள். வட ஆற்காடு மாவட்டத்தின் பல பகுதிகளிலிருந்தும் மக்கள் புகைவண்டியின் மூலமாகவும், பஸ்கள் மூலமாகவும் வந்துகொண்டேயிருக்கிறார்கள் இளைஞர் கூட்டம் படை படையாகத் திரண்டவண்ணமிருக்கின்றன. மாநாட்டின் பிரதிநிதிகளுக்கும் பார்வையாளர்களுக்கும் நல்ல முறையில் உணவு வசதியும், உறையுள் வசதியும், நிகழ்ச்சிகளை இருந்து காணும் வசதியும் செய்யப்பட்டிருக்கின்றன. வெள்ளம் பெருகுவதுபோல் மக்கட் கூட்டம் மணிக்கு மணி பெருகிக் கொண்டேயிருக்கிறது.

மாநாட்டுத் தலைவர் தோழர் க. அன்பழகன், துவக்குபவர் தோழர் எம். எஸ். இராமசாமி கழக சொற்பொழிவாளர் பலரும் கொடி மரத்தின் அடியில் வந்து சேர்ந்தார்கள். தோழர் மகாலிங்கம் இன்னிசை பாட்டுகள் இசைத்தார். தோழர் இரா. நெடுஞ்செழியன் கழகக் கொடியின் இலட்சிய விளக்கத்தை ஒலிபெருக்கி மூலம் கூற, மாநாட்டின் தலைவர் தோழர் க. அன்பழகன் கழகக் கொடியை வானளாவ பறக்கவிட்டார். பிறகு தலைவர் முன் நடக்க ஏனைய சொற்பொழிவாளர்களும், முக்கியஸ்தர்களும் பின்னடக்க எல்லோரும் மேடைவந்து சேர்ந்தார்கள்.

மேடையில் தோழியர் இராமாமிர்தத்தம்மையார், தோழர்கள் க. அன்பழகன், எம். எஸ். இராமசாமி, இரா. நெடுஞ்செழியன், சி. பி. சிற்றரசு, கே. பி. சுந்தரம், ப. உ. சண்முகம், புலவர் கோவிந்தன், வி. முனுசாமி, டி. வி. நாராயணசாமி, மகாலிங்கம் மற்றும் பல முக்கிய தோழர்கள் வீற்றிருந்தனர்.

தோழர் மகாலிங்கம் திராவிட நாட்டுப் பண்ணாகிய "வளமார் எமது திராவிடம் வாழ்க வாழ்கவே" என்ற பாடலை இனிய குரலில் நயம்பட இசைத்தார்.

பிறகு அருப்புக்கோட்டை திராவிடர் கழக உறுப்பினர் தோழர் எம். எஸ். இராமசாமி அவர்கள் சுமார் 1-15 மணி நேரம் அழகிய, கருத்து மிகுந்த, உணர்ச்சியைக் கிளரும் சொற்பொழிவாற்றி மாநாட்டைத் துவக்கி வைத்தார். (சொற்பொழிவு விபரம் பின்னர் வரும்)

மாநாட்டின் வரவேற்புக் கழகத் தலைவர் தோழர் கே. பி. சுந்தரம் அவர்கள் வரவேற்புக் குழுவின் சார்பாக யாவரையும் வரவேற்று, வரவேற்புரை நிகழ்த்தினார். (பிறிதோரிடத்தில் காண்க)

வரவேற்புக் கழகத் தலைவர் தோழர் க. அன்பழகன் அவர்களை மாநாட்டிற்குத் தலைமை தாங்கிக் கொடுக்கும்படியாகக் கேட்டுக்கொண்டார்.

வரவேற்புத் தலைவரின் வேண்டுகோளை வழிமொழிந்து தோழர்கள் திருவண்ணாமலை, ப. உ. சண்முகம், மூவலூர் இராமாமிர்தத்தம்மையார்,

(2-ம் பக்கம் பார்க்க)

ஜனநாயகவாதிகளின் இரத்தம் சிந்தப்படுகிறது

பாசிசத்தைக் கண்டிக்க பல்குழுவினரும் முன்வருக

சென்னை மாகாண தொழிற்சங்க காங்கிரஸ் கோரிக்கை

முடிவில்லாமல் வளர்ந்துவரும், அரசியல் கைதிகள் கோர மரணப் பட்டியலில் மேற்கொண்டும் ஒரு படுகொலை சேர்க்கப்பட்டுள்ளது இந்தத்தடவை மதுரை மத்திய சிறையில் இருந்த அரசியல் கைதிகள் மீது 20-6-50 அன்று காலையில் ஒரு மூர்க்கத்தனமான தடியடிப்பிரயோகம் நடைபெற்றது. அதன் விளைவாக திருப்பத்தூர் தோழர் ராமநாதன் இறந்துவிட்டார் எட்டுபேர்கள் படுகாயமடைந்திருக்கின்றனர். அதில் இருவர் நிலை கவலைக்கிடமாக இருக்கிறது. 24 மணி நேரத்திற்குள் மரணமென்றால் தடியாட்ட வெறி எவ்வளவு மூர்க்கத்தனமாகவும், இருந்திருக்க வேண்டும் இந்த வெறியாட்டம் நடத்தியவர்களின் மனிதத்தன்மையைப்பற்றி என்னவென்று கூறுவது!

தங்களுடைய குற்றத்தை மூடி மறைக்க, வழக்கமான கம்யூனிஸ்ட் பலாத்கார கட்டுக்கதை பரப்பியுள்ளனர். ஜெயில் அதிகாரிகள். இதை யார்தான் நம்புவர்? சேலத்தில் 23 வீரத் தியாகிகள் சிந்திய இரத்தம் இன்னும் உலரக்கூடவில்லை. சிறைக்குள்ளும், வெளியிலும் உண்மை ஜனநாயகவாதிகளின் ரத்தம் சிந்தப்படுவது அன்றாட சம்பவமாகிவிட்டது. ஒவ்வொரு நாளும் ஆட்சியாளர்களின் வேஷம் அம்பலமாகிறது. அவர்கள் பிரிட்டிஷ்—இந்திய பெரும் பணமூட்டைகளின் காவலர்கள். மகாராஜாக்களின்—ஜமீன்தார்கள் இவர்களின் மெய்க்காப்பாளர்கள் அமெரிக்க பிரிட்டிஷ் ஏகாதிபத்திய தாஸர்கள்! மக்களை ஒடுக்கும் பாஸிசத்தன்மைகொண்டவர்கள் என்பது பட்டவர்த்தனமாகிவருகிறது. உண்மை ஜனநாயகவாதிகளின் உயிர், தேச விடுதலை இயக்க வீரர்களின் உயிர் அவர்களுக்கு மதிப்பற்றதாகிவிட்டது.

மதுரை சிறையில் நடந்த சம்பவங்கள், ஆட்சியாளரின் சிறைக்கொள்கையின் கோர விளைவு என்று சென்னை மாகாண தொழிற் சங்க காங்கிரஸ் குற்றம் சாட்டுகிறது. இது பற்றி பாரபட்சமற்ற பகிரங்க பொது ஜனவிசாரணை நடைபெறவேண்டும்! இதற்கு பொறுப்பாளிகள் கடுந்தண்டனைக்குள்ளாகவேண்டும் அரசியல் கைதிகளின்மீது இழைக்கப்படும் கொடுமைகள் நிறுத்தப்படவேண்டும்!

ஆட்சியாளர்கள் இந்தக் கோரிக்கைகளை உடனடியாக நிறைவேற்றச் செய்ய சகல ஜனநாயக சமாதானவாதிகளும், தொழிலாளர்கள், விவசாயிகள், மாணவர், மாதர் ஸ்தாபனங்களும் தங்களின் ஒன்றுபட்ட கண்டனக் குரலை எழுப்ப வேண்டுமென்றும் அரசியல் அபிப்பிராயங்கள் இன்றி, கட்சி வேறுபாடின்றி இந்த நியாயமான கோரிக்கைகளுக்கு ஆதரவாக கூட்டங்கள்போட்டு கண்டனத்தை பிரதம மந்திரி நேருவுக்கும், மாதவமேனனுக்கும் தெரிவிக்கும்முறையில் தந்தி அடிக்க வேண்டுமென சென்னை மா. தொ. ச. கா. கேட்டுக்கொள்ளுகிறது.

பருத்திக்கு மாற்றுப்பொருள் பயிரிட முயற்சி

பிரிட்டிஷ் ஜவுளித்தொழிலில் புரட்சி

லண்டன், ஜூன் 25—

பருத்திக்குப் பதில் பொருளாக 'ரமி' என்ற ஒரு பொருள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. பிரிட்டிஷ் பிரதேசங்களில் இதை பயிராக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுவருகின்றன. இத்திட்டம் வெற்றியடைந்தால் பிரிட்டிஷ் ஜவுளித் தொழிலில் புரட்சிகரமான மாறுதல் ஏற்படலாம்

முன்காலத்தில் எகிப்திய சவங்களை 'ரமி' என்ற நாரில் செய்யப்படும் துணிகளில்தான் சுற்றிவைப்பது வழக்கமாம். இது நீண்டகாலம் உழைக்கக்கூடியதாம். இதை கம்பளி பட்டு ரயான் முதலியவைகளுடன் சேர்த்தால் அவைகளும் உறுதிப்பட்டு நீண்டநாட்கள் உழைக்கும் தன்மையடைகிறதாம். 'ரமி' ஈரமாக இருக்கும்போது இதற்கு இன்னும் உறுதி அதிகமாம் முன்பு இது சீனாவில் உற்பத்திசெய்யப்பட்டதாம். ஆனால் பிரிட்டிஷ் காமன்வெல்த்தில் இதுவரை இது உற்பத்திசெய்யப்படவில்லை.

இப்பொழுது பிரிட்டிஷ் ஹோன்டுராஸில் 1500 ஏகராவில் இது பரீட்சார்த்தமாக பயிரிடப்படவிருக்கிறது. இதன் பின்னர் இதுவட போர்னியோவில் பயிரிடப்படுமாம்.

'ரமி' பருத்தியைவிட அதிக விலையுள்ளது என்றாலும் ஏராளமாக பயிர் செய்யப்படடால் விலை குறையலாமாம்.

அடக்குமுறைச் சட்டத்துக்கு அடக்குமுறை

14-ம் பிரிவு ஒழிக்கப்பட்டது

புதுடெல்லி, ஜூன், 23 —

காவற் சிறை சட்டத்தின் 14-வது பிரிவை ரத்துசெய்து இந்திய குடியரசுத்[illegible] இன்று அவசரச்சட்ட[illegible] பித்துள்ளார்.

இந்தப்பிரிவு அரசி[illegible] டம் வழங்கும் உரிமை[illegible] மாறுபட்டது என சு[illegible] கோர்ட் தீர்ப்பு கூறியபடி, பொட்டிவேகுடியரசுத்தலைவர் இந்த அவசர உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

மாலை மணி

சென்னை 26—6—50 திங்கட்கிழமை

அர்த்தமற்ற : : அடக்குமுறை

அதிகார போதை பொல்லாதது. திப்போதை ஏறப்பெற்ற பண்ணியவர்களுக்கு என்ன செய்வது, எப்படிச் செய்வது, ஏன் செய்வது என்பன போன்ற சிந்தனையே இருப்பதில்லை. விருப்பிய போது கையிலுள்ள அதிகாரத்தைப் பயன்படுத்திப் பார்த்துவிட வேண்டும் என்பதொன்றே இவர்களின் எண்ணம்.

இத்தகைய எண்ணத்தின் இருப்பிடமாக விளங்குகின்றனர் நமது சென்னை மாநில ஆட்சியாளர். தமதுபதவியைக் காப்பாற்றிக் கொள்வதொன்றே குறிக்கோளாகக் கொண்ட இவர்கள் தம்மிடமுள்ள அடக்குமுறைச் சட்டங்களை சிலவேளைகளில் இடம்தெரியாது வீசிப்பார்க்கின்றனர். மக்கட் சக்தியின் மாண்பு தெரியாது தாம் கண்டதே காட்சி; கொண்டதே கோலமென நடக்கின்றனர்.

அண்மையில் சீர்காழியில் தி. மு. க. பொதுச்செயலாளர் பேச இருந்த பொதுக்கூட்டத்துக்கு 144 தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருப்பதே ஆட்சியாளரின் இத்தகைய போக்கிற்கு ஓர் எடுத்துக்காட்டாகும்.

மாயவரம், குடந்தை, தஞ்சை, நாகை, பட்டுக்கோட்டை, திருத்துறைப்பூண்டி என்று அடுத்தடுத்துப் பல கூட்டங்களில் பேசியிருக்கிறார் பொதுச் செயலாளர். அங்கெல்லாம் பல்லாயிரக்கணக்கில் மக்கள் திரண்டு நின்று ஆர்வத்தோடு அமைதியோடும் சொற்பொழிவைக் கேட்டிருக்கின்றனர். அமைதிக்குப் பங்கம் விளையக்கூடிய நிகழ்ச்சி எதும் ஏற்பட்ட எல்லை. அங்ஙனமிருக்க, சீர்காழியில் மட்டும் 144 தடையுத்தரவு விதிக்கப்பட்டிருப்பதும் அமைதியைப் பாதுகாக்கவே இச் செயலை மேற்கொண்டோம் என்ற அந்த வட்டாரப் போலீஸ் அதிகாரிகள் காரணங்காட்டியிருப்பதும் விந்தையாகவே இருக்கிறது.

அமைதிக்குப் பங்கம் விளையுமாம்! எங்கே—யாரால்—எப்படி என்பதை உணராத காரணத்தால் எழுந்த அர்த்தமற்ற வாதம்!

திராவிட முன்னேற்றக் கழகத்தினரால் இன்ன இடத்தில் இன்ன கலகம் மூண்டது என்று ஆட்சியாளர் சொல்ல முடியுமா? அல்லது ஆட்சியாளரின் அர்த்தங்க எடுத்...லாவது அதற்கு அதாரங்...ண்டா? இல்லையெனில் ...த்தகைய அர்த்தமற்ற ...முறை என்று கேட்...

...ருநாட்சி—நாட்டுமக்களின் ...ம்மதியைப் பெற்ற கட்சி...ர் ...ணியே அப்படைப்...ண் கொண்ட கட்சி

ஜனநாயகத்திலே அசையாத நம்பிக்கை கொண்டுள்ள கட்சி அடக்குமுறைகளுக்கிடையேயும் அமைதியைக் காக்கவிரும்பும் கட்சி கூட்டுகின்ற கூட்டத்தால் அமைதி கெடும் என சொல்லுவது பொருந்தாக் கூற்றேயாகும்.

ஆட்சியாளரின் வாதப்படியே பார்த்தாலும், அமைதியை நிலைநாட்டும் வழி இது தானா? ஜனநாயக உரிமையை பலியிட்டா அமைதியைக் காக்க முயல்வது? பொதுக்கூட்டம் கூட்டி பொதுமக்களுக்குத் தம் கருத்தை வெளியிட எல்லா கட்சிகளுக்கும் உரிமை உண்டு; அதற்கு எங்களுடைய ஜனநாயக அரசியலில் இடமுண்டு என்றெல்லாம் பறைசாற்றித் திரியும் சுதந்திரவீரர்களா இச்செயலை மேற்கொள்வது? அமைதிக்குப் பங்கம் வராதபடி பொதுக்கூட்டத்துக்குப் பாதுகாப்பாறலே தேடித்தந்திருக்க வேண்டும் இவர்கள். அதுதன்றே உண்மையான ஜனநாயக முறையாகும்.

இதனைவிடுத்து, மக்களின் ஆர்வத்திற்கு குறுக்கே நின்று, பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் தந்துவிட்டுப்போன 144 என்னும் அடக்குமுறைச் சட்டத்தின் துணைகொண்டு பொதுக்கூட்டத்தை, அதிலும் திருந்திய பண்புபெற்ற திராவிட முன்னேற்றக் கழகப் பொதுக்கூட்டத்தைத் தடைசெய்ய முன்வந்தது, வெட்கக்கேடான செயலாகும். அதுமட்டுமல்ல. இத்தகைய தடைவிதிப்புகளால் அரசாங்கம் திராவிடப் பெருங்குடி மக்களின் உள்ளத்தைப் புண்படுத்துகிறது என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

முன்னேற்றக் கருத்தடைய ஏடுகளைப் பறிமுதல் செய்தல், எழுத்துத் தோழர்கள் போன்ற பல தொல்லைகளைக் கொடுத்து வருவதுமின்றி, இங்ஙனம் கூட்டங்களுக்கும் தடைவிதிப்பது என்று ஆரம்பித்தால் ஆட்சியாளரின் போக்கினை நாம் சந்தேகிக்க வேண்டியவர்களாகிறோம். மக்கள் மன்றத்துக்கு மதிப்பு தராத ஆட்சி எங்கே ஜனநாயகத்தை மறந்துவிட்டதோ என்று நினைக்கவேண்டியவர்களாகிறோம்.

எனவே, இனியேனும், வேண்டாம் வீண் வம்பு என ஆட்சியாளருக்கு அறிவுரை கூறவிழைகிறோம். எக்காரணம் கொண்டும் மக்கள் மன்றத்தின் மனதைப் புண்படுத்துதல் கூடாது—அது அடாதது என்பதையும் சுட்டிக் காட்ட விரும்புகிறோம்.

எனவே இனியேனும் அர்த்தமற்ற அடக்குமுறைகளில் நாட்டம் செலுத்தாது, அறிவைத் துணைக்கொண்டு இக்கோ...ல் ஆட்சியாளர் ஈடுபட வேண்டும்!

ஆரணியில்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கி. பி. சிற்றரசு, இரா. நெடுஞ்செழியன் ஆகியோர் தோழர் அன்பழகன் அவர்களின் பண்பு, பழக்க வழக்கம், அறிவாற்றல் திறன் ஆகியவை பற்றி விளக்கிக் கூற மாநாட்டிற்கு அவர் தலைமை தாங்குவது எல்லா விதத்திலும் பொருத்த முடையதாகும் என்று கூறினர்.

பிறகு பெருத்த கைத்தட்டலுக்கிடையே தோழர் க. அன்பழகன் அரிய ஆராய்ச்சி கொண்ட, உணர்ச்சியுள்ள தம் தலைமைச் சொற்பொழிவாற்றினர். (சொற்பொழிவின் முழுவிவரம் பின்னர் வெளிவரும்) கண்டகல் மணி ஒன்று ஆகியும், மக்கள் சொற்பொழிவிலே திளைத்திருந்தது குறிப்பிடத் தக்கது.

தலைவர் முன்னுரை சொற்பொழிவுக்குப் பின் மாநாடு இடைவேளைக்காக கலைந்தது.

மாநாட்டில் கலந்து கொள்ள ஆர்வத்தோடும், அக்கரையோடும் மக்கள் வந்து கொண்டேயிருக்கிறார்கள்.

(ம-வி)

கென்யாவில் காப்பி பண்ணைகள்

நைரோபி, ஜூன். 25—

காலனி காரியாலயத்துடன் நடத்தப்பட்ட சம்பாஷணையைத் தொடர்ந்து கென்யாவில் முன்பு ஜெர்மானியரால் நடத்தப்பட்ட காப்பிச் செடி பண்ணைகள் புதிதாக குடியேறுபவர்களுக்கு வேலை செய்ய அளிக்கப்படும் எனத்தெரிகிறது.

'ரெடிமேட்' கப்பல்கள்

லண்டன், ஜூன். 25—

ரெடிமேட் வீடுகள் போல 'ரெடிமேட் கப்பல்களுக்கான தனித் தனி பாகங்களும் தயார் செய்யக் கூடியதாகத் தெரிய வருகிறது. இதனால் கப்பல் கட்டுவதை சீக்கிரமாகவும், அதிக செலவின்றியும் செய்ய முடியும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. —ஏஜென்ஸி

பிராங்கோவின் இரகசிய பிரயாணம்

மாட்ரிட், ஜூன். 25—

ஜெனரல் பிராங்கோ தன் மோட்டார் படகில் மத்தியதரைக் கடலில் எங்கேயோ பிரயாணமாகியிருக்கிறார். சில முக்கிய புள்ளிகளை சந்தித்துப் பேசவே அவர் சென்றிருக்கிறார் என்றும் அவர்களில் ஒருவர் டாக்டர் சலஸார் இருக்கலாம் என்றும் வதந்திகள் நிலவி வருகின்றன. —ஏஜென்ஸி

மோகன் குமரமங்கலம் கைது செய்யப்பட்டார்

பம்பாய், ஜூன் 24—

தற்சமயம் இந்தோனேசியாவில் இந்திய தூதராகவிருக்கும் டாக்டர் சுப்பராயன் மகனும் கம்யூனிஸ்டு கட்சிப் பிரமுகருமான தோழர் மோகன் குமாரமங்கலம் இன்று பம்பாய் விசேஷ போலீசாரால் ஒரு வீட்டில் கைது செய்யப்பட்டார்.

தேடப்பட்டுவரும் கம்யூனிஸ்டுகளிலொருவரான தோழர் குமாரமங்கலம் பம்பாய் பொதுஜன பந்தோபஸ்து சட்டப்படி காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

மாநாடுகள் கூட்டுவதும் சொற்பொழிவாற்றுவதும் மட்டுமே நம் பணியாகாது

ஆக்கவேலைகளில் ஈடுபட அனைவரும் வாரீர்

—(:0:)—

மக்கள் மன்றத்தில் மதிப்பிழந்துவிட்டனர் ஆட்சியாளர்

—(...)—

வ. ஆ. மாவட்ட மாநாட்டில் தோழர் கே. பி. சுந்தரம் வரவேற்புரை

பேரன்புமிக்க பெரியோர்களே! தாய்மார்களே தோழர்களே!

உங்களனைவரையும் வரவேற்கும் பெரும் வாய்ப்பை எனக்களித்த மாநாட்டு வரவேற்புக் குழுவினர்க்கு என்து அன்புகலந்த வணக்கத்தை முதற்கண் தெரிவித்துக்கொள்கிறேன்.

பகுத்தறிவு இயக்கத்திலே பல ஆண்டுகளாக பணியாற்றி வரும் ஆரணி நகருக்கு மாநாடு நடத்தும் வாய்ப்புச் சிறப்பான வட ஆற்காடு மாவட்ட தி. மு. க. முதல் மாநாடு நடத்தும் வாய்ப்பும் அளித்த மாவட்டத் தோழர்களுக்கு வரவேற்புக் குழுவினர் சார்பாக என் அன்புகலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்,

நமது தனிப்பெருந் தலைவர் பெரியார் அவர்களிடம் ஏற்பட்டக் கருத்து வேற்றுமையால் தனிக்கழகம் கண்டோம். தி. மு. கழகம் துவக்கி 10 மாத காலத்தில் சுமார் ஐநூறுக்கு மேற்பட்ட கிளை கழகம் துவக்கியும் இந்த மாவட்ட மாநாடு நடத்தி இன்று இங்கு நாம் ஆறுவது மாநாடாக கூடியுள்ளோம். நம் கழக சொற்பொழிவாளர்கள் பட்டிதொட்டி முதல் பெரும் நகரங்கள் வரைக்கும் தவறாமல் சுற்றி சூறாவளிப் பிரசாரம் செய்து வருகிறார்கள்.

மிக குறுகிய காலமாகிய பத்து திங்களில் இவ்வளவு பெரும் பணியினை எந்த சமூகமும் இதுவரை செய்திருக்க முடியாதென்பதுடன் இனி செய்யவும் முடியாதென பெருமிதத்துடன் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்

நம் கழகப் பிரசாரத்தால் மக்கள் விழிப்படைந்து வருவதைக்கண்டு காருண்யமிக்க காங்கிரஸ் அரசாங்கம் நம் மீது பலவித அடக்குமுறைகளை வீசி வருகிறது. அகிம்சா வீரர்கள் ஆகஸ்டு தியாகிகள் வெள்ளையனை வெளியேற்றிய தீரர்கள் நம் பகுத்தறிவு பிரசாரத்தாலும் அவர்களின் பித்தலாட்டப் பிரசாரத்தாலும் மக்கள் மன்றத்திலே மதிப்பிழந்து வருவதற்கு நம் மீது காய்ந்து நம்மை ஒழித்துக்கட்ட திட்டமிட்டு வேலை செய்கிறது.

நாம் பத்து ஆண்டுகளுக்கு மேலாக வேண்டாமென்ச் சொல்லிவரும் இந்தியை டைய...ல் பல ...டன் நம்மீது சுமத்த மத்திய அரசாங்கமும், மாகாண அரசாங்கமும் தீவிரமாக வேலை செய்துவருகிறது.

நாம் மாநாடுகள் கூட்டுவதாலோ சொற்பொழிவு நிகழ்த்திவிடுவதாலோ நம் பணி முடிந்துவிட்டதாக எண்ணிவிடாமல் இந்த மாநாட்டில் நம் எதிர்கால ஆக்கவேலைகளை எந்த முறையில் நடத்துவதென முடிவு செய்து அதற்கேற்றமுறையில் கட்டுப்பாடாக பணியாற்ற ஒவ்வொரு கழகத் தோழர்களும் முன்வரவேணுமாய்க் கேட்டுக்கொள்ளுகிறேன்.

இந்த மாநாடு நடத்தும் வரவேற்புக் குழுவில் பல தோழர்கள் என் போன்ற பாட்டாளிகள் பண பலமோ, பதவி பலமோ, அதிகார பலமோ இல்லாதவர்கள். மேலும் மாநாடு நடத்தப் பூர்வாங்க வேலையே பத்து நாளைக்கு முன்தான் தொடங்கினோம். ஆயினும் மாவட்டத் தோழர்கள் ஒத்துழைப்பும், ஆரணித்தோழர்கள் எப்படியாவது நம் ஊரில் இந்த மாநாடு நடத்தியே தீர வேண்டுமென்ற ஆர்வமும் தான் மாநாட்டிற்கு மூலதனம் ஆகையால் இந்த மாநாட்டில் ஏதாவது குற்றம் குறைகள் இருப்பினும் பொருத்துக்கொண்டு மாநாடு முடியும் வரை எல்லோரும் எங்களுடன் ஒத்துழைத்து மாநாட்டை சிறப்புற நடத்திக் கொடுக்க வேணுமாய் மிக பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

யுனைடெட்ஸ்டேட்ஸுக்கு இந்திய மாங்கனிஸ்

புதுடில்லி, ஜூன். 25—

புது இந்திய—யுனைடெட் ஸ்டேட்ஸ் உடன்படிக்கையின்படி யுனைடெட்ஸ்டேட்ஸுக்கு வரையறை அளவில்லாமல் மாங்கனிஸை இந்தியா சப்ளை செய்யும் எனத்தெரிகிறது.

சென்ற மாதத்தில் மட்டும் 8000 டன் மாங்கனிஸ் யுனைடெட் ஸ்டேட்ஸுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது.

இசையால் இயங்கும் மோட்டார் படகு

லண்டன், ஜூன் 25—

சங்கீதநாதத்தின் மூலம் 68 அடி நீளமுள்ள மோட்டார் படகு ஒன்றை ஓட்டும்படி செய்யலாம் என்பது ஒயிட் தீவில் செய்துகாட்டப்பட்டது. வெடிகுண்டுடன் கூடிய படகைமட்டுமிட்டு தக்க செய்திகளாக இந்த வழி கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. வெகு தூரத்திலுள்ள ஒரு கப்பலில் இருந்தபடி ஒரு சாதனங்களைக்கொண்டு படகை ஓட்டச்செய்யலாமாம்.

தஞ்சை மாவட்டத்தில் பொதுச் செயலாளர்

பொதுக்கூட்ட நிகழ்ச்சிகள்

(முன் தொடர்ச்சி)

திருத்துறைப்பூண்டி

19—6—50 காலை நகையில் இருந்து தோழர்கள் அண்ணாதுரை, பெத்தாம்பாளையம் பழனிச்சாமி கே. கே. நீலமேகம், வி. பராங்குசம் முதலியவர்களுடன் காலை 10-மணிக்கு காரில் இவ்விடம் வந்து சேர்ந்தார்கள். கடை வீதியிலிருந்து கழகத் தோழர்களால் வரவேற்கப்பட்டு அழைத்துச் செல்லப்பட்டார்கள். பொதுச் செயலாளர் இவ்விடம் வந்து சேர்ந்தது முதல் சுற்றுப்புற கிராமங்களிலிருந்து கழகத் தோழர்கள் வந்து சந்தித்துப் பேசிக் கொண்டிருந்தார்கள். மாலை 6 மணிக்குக் கூட்டம் ஆரம்பிக்கும் போது சுமார் 10 ஆயிரம் பேர்களுக்கு மேல் கூடி விட்டார்கள். கூட்டத்துக்குத் தோழர் பெத்தாம்பாளையம் பழனிச்சாமி அவர்கள் தலைமை வகித்து, அரசியலாரின் இந்திக்கொள்கையையும், உணவுப் பிரச்னை பற்றியும் சொற்பொழிவாற்றினார். பிறகு தோழர் கே. கே. நீலமேகம் நம் கழக வேலை திட்டங்களைப் பற்றியும், தோழர்கள் நடந்து கொள்ளவேண்டிய முறைகளைப் பற்றியும், உணர்ச்சி ததும்ப சொற்பெருக்காற்றினார். பின்னர், நெடும்பலம் தி. மு. கழகத்தாரால் தோழர் அண்ணாத்துரை அவர்களுக்கு ஒரு வரவேற்பிதழ் வாசித்தளிக்கப்பட்டது. பல கழகங்களின் சார்பில் பொதுச்செயலாளருக்கு மாலைகள் அணிவிக்கப்பட்டது. பின்னர் தோழர் அண்ணாத்துரை அவர்கள் அரசியலாரின் பிற்போக்கு திட்டங்களைக் கண்டித்தும், மாகாண மந்திரி சபை மாறுதல்களைப்பற்றியும் மத்திய நிதிமந்திரிகள் மாற்றப்படுவதுபற்றியும், மத்திய சர்க்காரிடம் நம் மாகாணம் அகப்பட்டுக்கொண்டு சீழிவதைப்பற்றியும், திராவிட நாட்டுப் பிரிவினையின் அவசியம் பற்றியும் விளக்கி சுமார் 2-மணி நேரம் சொற்பொழிவாற்றினார். தி. மு. க. செயலாளர் நன்றிகூற கூட்டம் இனிது முடிவுற்றது.

கழகத் தோழர்களால் அன்று இரவு உணவு சிறந்த முறையில் அளிக்கப்பட்டது. இரவு தங்கி 20-6-50 காலை 8-மணிக்கு புறப்பட்டு முத்துப்பேட்டை சென்றார்கள்.

முத்துப்பேட்டை

20ந் தேதி காலை 9-மணிக்கு திருத்துறைப்பூண்டியிலிருந்து அண்ணா அவர்கள், தோழர்கள் பெத்தாம்பாளையம் பழனிச்சாமி, கே. கே. நீலமேகம், எஸ். வி. லிங்கம், வி. பராங்குசம் முதலியவர்களுடன் காரில் இவ்விடம் வந்து சேர்ந்தார்கள். அண்ணாத்துரை வந்திறங்கியதிலிருந்து சுற்றுப்புற கிராமங்களிலிருந்து பல கழகத் தோழர்கள் வந்து சந்தித்துப் கழக சம்பந்தமாக பேசிக் கொண்டிருந்தார்கள். தெருக்கள் எல்லாம் வளைவுகளாலும் கழகக் கொடிகளாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தது. மாலை 6-மணிக்கு வ. உ. சி. திடலில் பொதுக்கூட்டம் ஆரம்பமாகியது. கூட்டத்துக்கு சுற்றுப்புற கிராமங்கள், பட்டுக்கோட்டை, திருத்துறைப்பூண்டி முதலிய ஊர்களிலிருந்து 10 ஆயிரத்துக்குமேற்பட்ட மக்கள் வந்திருந்தார்கள். கூட்டத்துக்கு தோழர் பெத்தாம்பாளையம் பழனிச்சாமி அவர்கள் தலைமைவகித்து மந்திரிசபைபற்றியும், உணவுப் பிரச்னைபற்றியும் சொற்பொழிவாற்றினார். பிறகு தோழர் கே. கே. நீலமேகம் அவர்கள் திராவிடர் கழகத்துக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்துக்கும் கொள்கை அளவில் எவ்வித மாறுதலுமில்லையென்றும் அரசியலாரின் இந்தி திணிப்பைப்பற்றியும் நீண்டநேரம் சொற்பொழிவாற்றினார். பிறகு தோழர் கர்மவீரகம் சிறிது நேரம்பேசினார். பிறகு அண்ணா அவர்கள் தற்கால அரசியல் நிலைபற்றியும் அடிக்கடி மாகாண மந்திரிசபை மாறுதல், மத்திய நிதி மந்திரிகள் மாற்றப்படுதல், உடை, உணவு முதலிய பிரச்னைகளில் அரசியலார் கடைபிடிக்கும் பிற்போக்கு திட்டங்கள் ஆகியவற்றை கண்டித்தும், சர்க்காரின் அடக்குமுறைகளைப் பற்றியும் விரிவாக 1-30 மணி நேரம் சொற்பொழிவாற்றினார்கள்.

செயலாளர் நன்றி கூற கூட்டம் இரவு 9-மணிக்கு இனிது முடிந்தது.

அண்ணா முதலியவர்களுக்கு தோழர் பளிணிவேல் அவர்கள் இல்லத்தில் பகல் இரவு உணவு சிறந்த முறையில் அளிக்கப்பட்டது.

21—6—50 காலை 8-மணிக்கு முத்துப்பேட்டையிலிருந்து புறப்பட்டு கள்ளிக்குடியில் நடைபெறும் தோழர் நடராசன், தோழியர் தனலட்சுமி ஆகியவர்களின் திருமணத்துக்குச் சென்றார்கள்.

கள்ளிக்குடி வர்த்தகர் பணைகள் நடராசன் அண்ணன் தோழர் பழனிவேல் அவர்கள் மாலையிட்டு வரவேற்று உபசரித்தார். காலை உணவுக்குப் பின் திருமணம் 9-மணிக்கு ஆரம்பமாகியது. அண்ணா அவர்களை திருமணத்துக்கு தலைமை வகித்து நடத்திக்கொடுக்கும்படி தோழர் பழனிவேல் அவர்கள் கேட்டுக்கொள்ள அண்ணா தலைமை வகித்தார். சீர்திருத்த திருமணம்பற்றி தோழர்கள் சி. கிருஷ்ணமூர்த்தி, என். எஸ். ராமலிங்கம், வக்கீல் கல்யாணசுந்தரம், கே. கே. நீலமேகம் ஆகியவர்கள் பேசினார்கள். பின்னர் மணமக்களுக்கு ... தோழர்களால் வாழ்த்துப் பத்திரங்கள் படித்தளிக்கப்பட்டன. மண மக்களுக்கு ஏராளமான பரிசுகள் அளிக்கப்பட்டன. பிறகு அண்ணா அவர்கள் சீர்திருத்த திருமணங்களின் அவசியம்பற்றியும், திருமணங்களை பதிவு செய்யவேண்டிய அவசியத்தைப்பற்றியும் புராணத் திருமணங்களை கண்டித்தும் ஒரு மணி நேரத்துக்கு மேல் சொற்பெருக்காற்றினார்கள். பகல் உணவுக்குப்பின் 3-மணிக்கு புறப்பட்டு பட்டுக்கோட்டை செல்லும் வழியில் முத்துப்பேட்டை டாக்டர் சிவசங்கரன் அவர்கள் இல்லத்தில் அண்ணா முதலியவர்களுக்கு ஓர் தேனீர் விருந்தளிக்கப்பட்டது. தோழர் பழனிவேல் நன்றிகூற திருமணம் இனிது முடிவுற்றது. கழகத் தோழர்களால் இரவு உணவு சிறந்த முறையில் அளிக்கப்பட்டது. பின்னர் தஞ்சை மாவட்ட சோஷியலிஸ்ட் கட்சி அமைப்பாளர் தோழர் வேதாசலம் அவர்கள் வந்து தோழர் அண்ணாத்துரை அவர்களை சந்தித்து பேசிக்கொண்டிருந்து விட்டு சென்றார்.

பட்டுக்கோட்டை

2?-ம் தேதி மாலை 5 மணிக்கு கள்ளிக்குடியிலிருந்து தோழர் அண்ணாத்துரை அவர்கள் தோழர்கள் பெத்தாம்பாளையம் பழனிச்சாமி, கே. கே. நீலமேகம், எஸ். வி. ரங்கம், வி. பராங்குசம் ஆகியவர்களுடன் பட்டுக்கோட்டை வந்து சேர்ந்தவுடன் கழகத் தோழர்களால் வரவேற்கப்பட்டு அழைத்துச் செல்லப்பட்டார்கள். கூட்டத்துக்கு 15 ஆயிரத்துக்குமேற்பட்ட மக்கள்வந்து கூடிவிட்டார்கள். 6 மணிக்கு பொதுக்கூட்டம் தோழர் கே. கே. நீலமேகம் அவர்கள் தலைமையில் துவக்கப்பட்டது. தலைவர் முன்னுரைக்குப்பின் பெத்தாம்பாளையம் பழனிச்சாமி அவர்கள் சிறிது நேரம் பேசினார்கள். பின்னர் பட்டுக்கோட்டை உயர்நிலைப் பள்ளி திராவிட மாணவர்களால் தோழர் அண்ணாத்துரை அவர்களுக்கு ஓர் வரவேற்பிதழ் படித்தளிக்கப்பட்டு, கட்டிட நிதிக்காக ரூபாய் 20 கொண்ட பணமுடிப்பும் அளிக்கப்பட்டது. பண்ணவயல் சோ. சண்முகம் அவர்களால் 101 ரூபாய் கொண்ட பணமுடிப்பு அளிக்கப்பட்டது. பின்னர், தோழர் அண்ணாத்துரை அவர்கள் தி. மு. கழகம் துவக்கப்பட்டதன் அவசியத்தைப் பற்றியும், கொள்கை அளவில் திராவிட கழகத்துக்கும் தி. மு. கழகத்துக்கும் எவ்வித கருத்து வேற்றுமையும் இல்லை என்பதை விளக்கியும் சிறிது நேரம் பேசி பிறகு அரசியல், பொருளாதாரம், சமுதாயம் முதலிய துறைகளில் அரசியலாரால் கடைபிடிக்கப்படும் பிற்போக்குத் திட்டங்களை கண்டித்தும் திராவிடநாட்டுப் பிரிவினையின் அவசியத்தை விளக்கியும் சுமார் 1-30 மணி நேரத்துக்கு மேல் அரிய தொரு சொற்பெருக்காற்றினார்கள். செயலாளர் அவர்களால் நன்றிகூறப்பட்டு கூட்டம் இனிது முடிந்தது.

தென்னுப்பிரிக்காவில் போராட்டம் வளருகிறது

இன வட்டார சட்டத்தை எதிர்த்து தொழிலாளர் வேலை நிறுத்தம்

மலானின் நிறவெறிக்கு நாடெங்கும் கண்டனம்

டர்பன், ஜூன் 25—

பல எதிர்ப்புகளுக்கிடையே தென்னுப்பிரிக்க சர்க்கார் தன்னுடைய நிறவெறியைத் தீர்த்துக்கொண்டது. இந்தியரையும், தென்னுப்பிரிக்கப் பழங்குடி மக்களையும் ஒதுக்கி வைக்கும் இனவட்டார மசோதா சட்டமாகிவிட்டது. ஆனால் இச்சட்டத்திற்கு உள்ள எதிர்ப்பு இன்னும் அடங்கியபாடில்லை. தென்னுப்பிரிக்காவின் பழங்குடி மக்களும் நிறவெறிக்காளாகும் பிறமக்களும் ஐக்கிய முன்னணி அமைத்துக் கொண்டு, இச்சட்டத்தை எதிர்த்துப் போராட புறப்பட்டுள்ளனர்.

தென்னுப்பிரிக்க பார்லிமெண்டில் நிறைவேறியுள்ள இன மண்டல சட்டத்தை எதிர்த்து நாளை தென்னுப்பிரிக்காவிலுள்ள வெள்ளையரல்லாதவர்கள் எல்லோரும் வேலைநிறுத்தம்செய்து அர்த்தால் அனுஷ்டிக்க முடிவுசெய்திருக்கின்றனர்.

ஆப்பிரிக்க நேஷனல் காங்கிரஸ் ஆப்பிரிக்க மக்கள் ஸ்தாபனம் தென்னப்பிரிக்க இந்திய காங்கிரஸ் இம்மூன்று ஸ்தாபனங்களும் இந்த கண்டனத்தில்ஒத்துழைக்கும்என்று தெரிகிறது

ஸ்கூல்கள், கடைகள் முதலியன மூடப்பட்டிருக்கும் எனத்தெரிகிறது.

பலாத்காரம் ஏற்படுவதை ஒருகாலும் அனுமதிக்க முடியாது என்றும் வேலைக்கு செல்ல விரும்புவர்களுக்கு போதிய பாதுகாப்பு அளிக்கப்படும் என்றும் போலீசார் அறிவித்திருக்கின்றனர்.

கூட்டம்போட அனுமதி மறுக்கப்பட்டிருப்பதால் பலாத்காரத்தில் இறங்கக் கூடாதுஎன்று எச்சரிக்க முடியாது போகிறது என்றும் ஆகவே அப்படி பலாத்காரம் ஏதாவது ஏற்பட்டால் அதற்கு தாங்கள் பொறுப்பில்லை என்று இந்திய சுதேசி தலைவர்கள் கூறுகிறார்கள்.

ஆனால் அநேக வெள்ளையர்கள் கருப்பர்களின் இக்கண்டன விஷயமாக அனுதாபமுள்ளவர்களாக இருக்கின்றனர். தங்கள் ஆட்சேபத்தைத் தெரிவிக்க இம்முறையை விட்டால் அவர்களுக்கு வேறு வழியில்லையே என்று அவர்கள் கருதுகிறார்கள்.

இதுதான் இன்றைய தென்னுப்பிரிக்காவின் நிலை. வெள்ளையரின் நிறத்திமிர் இதுகாறும் காட்டு நடப்பிலே இருந்து வந்தது போல் இன்று சட்டமாக உருப்பெற்று ஏட்டிலும் ஏறிவிட்டது. எனவேதான் இப்பொருமையினைத் தவிர்க்க வேண்டும் என்ற குறிக்கோளோடு போராடப் புறப்பட்டு விட்டனர் இந்தப் போராட்டம் தற்போது இழிவு நீக்கப் போராட்டமாகக் காட்சியளிக்கிறது. ...வேதான் அக்காட்டுத் ...தொழிலாளர் துக்க நாள் கொண்டாட முன் வந்துள்ளனர். ஆங்காங்கு வேலை நிறுத்தங்களும் செய்யப்படுமெனத் தெரிகிறது.

பழங்குடி மக்களின் இந்த எதிர்ப்பைச் சமாளிக்க ஆட்சியாளர் அடக்குமுறைகளைக் கையாள ஆரம்பித்திருக்கின்றனர். கூட்டம் கூடி தமது அதிருப்தியைத் தெரிவித்துக் கொள்வதற்குக்கூட மக்களுக்கு உரிமை அளிக்கப்படவில்லை கூட்டம் கூட அனுமதி மறுக்கப்பட்டிருக்கிறது. காரணம் கேட்டால் பலாத்காரம் நேராதிருக்க இதுதான் வழி என்கின்றனர். இது எங்கும். எப்பொழுதும் ஆட்சியாளர் கூறும் பொதுவானதோர் நொண்டிச் சமாதானமாகிவிட்டது. கூட்டம் கூடுவதைத் தடுத்துவிட்டால் பலாத்காரம் தோன்றுதாம்! என்னே விந்தை! கூட்டம்போட்டு குறையைத் தெரிவிக்க முடியாமையே பலாத்காரத்துக்குக் காரணமாகிவிட்டால் அப்பொழுது என்னசெய்வது. எனவேதான் "கூட்டம்போட அனுமதி மறுக்கப் பட்டிருப்பதால் பலாத்காரத்தில் இறங்கக் கூடாது என்று எச்சரிக்கமுடியாதுபோகிறது. ஆகவே அப்படிப்பட்ட பலாத்காரம் ஏதாவது ஏற்பட்டால் அதற்கு நாங்கள் பொறுப்பாளிகளாகமாட்டோம்" என்று சுதேசித் தலைவர்கள் தெளிவாகக் கூறிவிட்டனர். காட்டுப் பழங்குடி மக்கள் தலைவர்களின் பேச்சு நிறவெறியர்களின் காதில் எப்படி நுழையும்!

பிரிட்டனில் ஜனத்தொகை குறைகிறது?

லண்டன், ஜூன் 25—

2050-ம் ஆண்டில் பிரிட்டனின் ஜனத்தொகையில் 19000,000 குறைந்துவிடலாம் என்று ஜன... தொகை ராயல் கமிஷன் ... பார்க்கிறது. ஆனால் இ... மாகக் கூறுவன ;'அப்படி ... 'இப்படியிருந்தால்' ... நில பேர்களை கமிஷ... இறது.

இப்பொழுதுள்ள ... நிலைமை நீடித்தால் ... ஜனத்... ...

கட்டாய இந்தித் திட்டம் ஒரு அரசியல் பித்தலாட்டமே

.....................(:—:).....................

கூட்டுமுன்னணி அமைத்துப் போராட வாரீர்

...............(—)...............

கோவை பொதுக்கூட்டத்தில் கோரிக்கை

கோவை, ஜூன் 14—

பல்வேறு மொழிகளைத் தாய் மொழியாகக் கொண்டுள்ள பல தேசிய இனங்கள் அடங்கிய இந்திய யூனியனின் அரசாங்க மொழியாக, 15 ஆண்டுகளுக்கு ஆங்கிலமும், அதற்குப் பிறகு இந்தியும் என்று திட்டமிடப்பட்டிருப்பதை மாற்றி வழக்கத்திலிருக்கும் தேசிய மொழிகளே இந்திய யூனியனின் அரசாங்க மொழிகளாக ஏற்றுக்கொள்ள வேண்டுமெனவும், மாகாண சர்க்கார்களின் அரசாங்க மொழியாக பிரதேச மொழி இருக்க வேண்டுமெனவும், சென்னை ராஜ்யத்தில் இந்தி மொழியை கட்டாயமாக பாடசாலைகளில் போதிப்பதையும் வானொலிகளில் பிரசாரம் செய்வதையும் உடனடியாக கைவிட வேண்டுமெனவும் கோரும் தீர்மானம் ஒன்று நேற்று இங்கு நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

பல நூற்றுக்கணக்கானவர்கள் [illegible] அந்தக் கூட்டத்துக்கு 'மாதமணி' பத்திராதிபர் தோழர் ஜே. என். கண்ணப்பர் தலைமை வகித்தார். கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் கூறுவதாவது:—

இந்திய யூனியனின் அரசாங்க மொழியாக 15 ஆண்டுகளுக்கு ஆங்கிலமும் அதற்குப்பின்னர் சாத்தியமானால் முன்னரே, இந்தியும் இருக்கவேண்டுமென்று இன்றைய ஆட்சியாளரால் திட்டமாக்கப்பட்டுவிட்டது. இது இந்திமொழி அல்லாத இதர தேசியமொழிகளைப் பேசும் மக்களின் ஜனநாயகமான பூர்வமான மொழி, கலாச்சாரவளர்ச்சிக்கும், சுயநிர்ணய உரிமைக்கும் நாசம் விளைவிக்கத்தக்கதாக இருக்கின்றது. இப்படிக் கூறுவதின் மூலம் இந்தியையோ ஆங்கிலத்தையோ நாம் வெறுக்கவில்லை. 'தேசிய ஒற்றுமை' என்ற பெயரால் ஆளும் வர்க்கம் இந்திய மக்களைச் சுரண்டிக் கொழுப்பதற்கு ஒரு சாதனமாக இந்தியும் ஆங்கிலமும் உபயோகிக்கப்படுவதையே எதிர்க்கிறோம். மேலும் அரசிய ஆட்சிக்கும் [illegible] தெரியாதவர்களுக்கு அரசாங்க உத்தியோகம் கிடையாது என்று கூறி தனக்குச் சாதகமான ஒரு அதிகார வர்க்கத்தைச் சிருஷ்டித்ததோ, அதேபோன்று இந்திய ஆளும் வர்க்கமும் இந்தி தெரியாதவர்களுக்கு அரசாங்க உத்தியோகம் இல்லையென்று தீர்மானித்ததின் மூலம் ஒரு புதிய அதிகாரவர்க்கத்தைச் சிருஷ்டிக்க முயன்றுள்ளது.

பல்வேறு தேசிய மொழிகளைப் பேசும் பல தேசிய இனங்களை இணைத்து உருவாக்கப்பட்டுள்ள [illegible] அரசாங்க மொழிகளாக வழக்கத்திலுள்ள மொழிகள் அத்தனையையும் ஏற்றுக்கொள்வதுதான் ஜனநாயகமுறை. [illegible] ஒரு வல்லரசான சோவியத் [illegible] உலகநாடுகளின் சபை [illegible] ஐரோப்பாவின் [illegible] ஒன்றுக்கு மேற்பட்ட [illegible] சபை, அரசாங்க [illegible] ஏற்றுக்கொள்ளப்பட [illegible] அந்த முறை நன்கு [illegible] நடைமுறையில் [illegible] எனவே [illegible] அதற்கு [illegible]

தாய்மொழியைப் பாழ்படுத்தும் முறையாகும்.

சொந்த தாய் மொழியையே கற்றுக் கொள்ளப் போதிய வசதியில்லாத இன்றைய நிலையில் பல கோடி மக்கள் புதிதாகப் புகுத்தப்படும் வேறு மொழியைக் கற்றுக் கொள்ளவே முடியாது. எனவே, பல தேசிய இனங்களுக்குப் புதியதான ஒரு மொழியை அரசாங்க மொழியாகத் திணிப்பது அம்மொழியை அறியாத பல கோடி மக்களை தேசிய, பொருளாதார சமூக, அரசியல் துறைகளிலிருந்து விலக்கி வைப்பதற்காகவும், ஒரு தேசிய இனத்தை மற்றொரு தேசிய இனத்தோடு மோதவிட்டு பிரித்தாளும் சூழ்ச்சியைக் கையாள்வதற்காகவும் செய்யப்படும் முயற்சியேயாகும்.

மற்ற மாகாண சர்க்கார்களுக்கும் முந்திக்கொண்டு, இந்திய ஆளும்வர்க்கத்தின் சென்னை மாகாணக் கூட்டாளிகள் இந்தி மொழியைப் பாடசாலைகளில் கட்டாயமாகப் போதிக்க ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அதை மேலும் வலியுறுத்த சென்னை மாகாண ரேடியோக்களில் இந்தி போதனையைத் திணித்திருக்கிறார்கள். மிகவும் பிற்போக்கான இம் மக்களின் அறிவை அழுத்தவைப்பதற்கும் இந்திய முதலாளித்துவ ஆளும் வர்க்கம் எடுத்துக்கொண்டுள்ள நடவடிக்கைகளை இக்கூட்டம் மிகவும் வன்மையாகக் கண்டிக்கிறது. உடனடியாக இந்த நடவடிக்கைகளைக் கைவிடுமாறு சென்னை மாகாண சர்க்காரை வற்புறுத்துகிறது. இந்திய பார்லிமெண்ட் மொழி பற்றிய விதியை மாற்றி வழக்கத்திலிருக்கும் தேசியமொழிகள் அத்தனையையும் அரசாங்க மொழிகளாகவும், பிரதேசமாகாண சர்க்கார்களின் மொழியாக பிரதேச மொழிகளும் இருக்கவும் வகுப்பதற்கான நடவடிக்கைகளை உடனே மேற்கொள்ளவேண்டுமென்று இக்கூட்டம் வற்புறுத்துகிறது.

மொழிபற்றிய தங்கள் தற்போதைய கொள்கைகளை அரசாங்கம் கைவிடவேண்டும். அல்லது தேசிய [illegible] கைவிடச்செய்வதற்கான நடவடிக்கை பொதுமக்கள் முன்வந்து மேற்கொள்வதற்காக சகல முற்போக்குவாதிகளும், சகல ஜனநாயக அரசியல்வாதிகளும் ஸ்தாபனங்களும் அதற்காக கூட்டணி வகுத்துப் போராட முன்வர வேண்டுமென்று இக்கூட்டம் அழைக்கிறது.

கூட்டத்தை "மாதமணி" ஆசிரியரும், கோவை ஜில்லா [illegible] போக்குவரத்து தொழிலாளர் சங்க செயலாளருமான தோழர் கே. வி. எஸ். அருணாசலம் ஆரம்பித்து வைத்தார். தோழர்கள் என். சதாசிவம், என். மீனாட்சிசுந்தரம், அய்யாசாமி, ஏ. வெங்கடேஸ் புலவர் இருட்டி சாமி, தண்டபாணி ஆகியோர் பேசினர்.

மகாராஜா வீடு ஏலம்!

லண்டன், ஜூன் 23—

ஸர்ரேயில் உள்ள பரோடா மகாராஜாவின் 88 ஏக்கர் எஸ்டேட், ஏலத்திற்கு விடப்பட்டதில் 27000 பவுண்டுக்கு விற்கப்பட்டதாகத் தெரிகிறது. இதை வாங்கியவரின் பெயரை பரோடா மகாராஜ ஏஜெண்டுகள் வெளிப்படவில்லை. இதை ஒரு லண்டன் வியாபாரி [illegible] என்று கூறப்படுகிறது.

இனி நடப்பவை

*

வ. ஆ. ஜில்லா தாழ்த்தப்பட்டோர் சம்மேளன கமிட்டிக் கூட்டம்:—வருகிற 2—7—50 ஞாயிறு மாலை 2-மணிக்கு மேற்படி கமிட்டி கூட்டம், குடியாத்தம் கொண்ட சமுத்திரம் பெடரேஷன் கட்டடத்தில் நடைபெறும்.

* * *

சென்னை சிறை அலங்கிக்கும் தொழிலாளர் சங்கத்தின் சார்பில் 27—6—50 காலை 9-30 மணிக்கு ஒரு பொதுக்கூட்டம் காட்டுப்பேட்டை பார் சேரவில் தெரு எண். 21 திருமணச்சத்திரத்தில் தோழர் வி. சக்கரை செட்டியார் தலைமையில் நடைபெறும். அதுபோது என். ஜீவரத்தினம் எம். பி., எஸ். மகாதேவன் மற்றும்பலர் பேசுவர்.

'புதுமை' துவக்கவிழா

பெங்களூர், ஜூன். 22—

22—6—50 அன்று புதுமைப் பதிப்பகத்தின் சார்பாக "புதுமை" என்ற ஒரு கையெழுத்து மாதப் பத்திரிகை துவக்கப்பட்டது. புதுமை'யின் துவக்கவிழா அன்று மாலை 6 மணிக்கு நடைபெற்றது. விழாவிற்கு பொதுமக்களும், தொழிலாளர்களும், மாணவர்களுமாக சுமார் 60 பேருக்கு மேல் வருகை தந்திருந்தனர். தோழர் சி. ஆறுமுகம் அவர்கள் விழாவிற்குத் தலைமைதாங்கி பதிப்பகத்தாரின் கன்முயற்சியைப் பாராட்டிப் பேசினார்கள்.

இன்று வெளியிடப்பட்டுள்ள "புதுமை" முதல் இதழில், இடிக்க இதயம், அதனின் சிரிப்பு, வாழ்வா வறு-மாயம்? புதிர்சாவி கனி ஆகிய எழுச்சிக்கவிகள் இடம் பெற்றுள்ளன. இந்த இதழ் வ.வு.சி. யின் நினைவுச்சின்னமாக வெளியிடப்பட்டுள்ளது. இரவு 9 மணிக்கு செயலாளர் நன்றிகூற கூட்டம் இனிது முடிந்தது.

பிரிவு உபசாரக் கூட்டம்

பம்பாய், ஜூன் 22—

பம்பாய் தமிழர் விளையாட்டுக் கழகத்தின் முக்கிய அங்கத்தினரும், கடந்த மூன்று ஆண்டுகளாக கழகத்தில் முக்கிய பொறுப்புள்ள பதவிகளை ஏற்று கழகத்தை செவ்வனே நடத்திச் சென்றவருமான தோழர் எ. சமலைநாதன் அவர்கள் 11—6—50-ல் தன் தாயகம் செல்லும் பிரிவை முன்னிட்டு அன்னாருக்கு 7—6—50-ல் மாதாசி, சாந்தாசியா சால் 20- எண் இல்லத்தில் உயர்திரு. எஸ். எம். சங்கர் (க. த.) அவர்கள் தலைமையில் மாலை சுமார் 7-30 மணிக்கு ஓர் பிரிவு உபசாரக் கூட்டம் நடைபெற்றது. தோழர் எஸ். எம். சுப்பையா அவர்கள் அன்னாரின் தளரா உழைப்பைக் குறித்து சுமார் 15 நிமிடங்கள் சொற்பொழிவு ஆற்றி கழகத்தின் சார்பாக மலர்மாலை அணிவித்தார். கூட்டத்திற்கு சுமார் 80 அங்கத்தினர்கள் வந்திருந்தனர். தலைவர் முடிவுரைக்குப்பின் அங்கத்தினர்களுக்குத் தேநீர் விருந்து அளிக்கப்பட்டது. செயலாளர் நன்றிகூற கூட்டம் சுமார் 9-30 மணிக்கு இனிது கலைந்தது.

ஜனநாயகம் :: :: உதயமாகிறது

சிங்கப்பூர், ஜூன் 25—

தன் ராஜாங்கசபை பொது மக்களால் ஜனநாயக முறையில் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்று விரும்பி இந்த யோசனையை பெடரேஷனுக்கு தெரிவிப்பதற்காக ஒரு செலக்ட் கமிட்டியையும் நியமித்திருக்கிறது.

இம்மாதிரி நடவடிக்கையில் இறங்கும் முதல் மலேயா நாடு 'ஜோஹார்' தான்.

தாராபுரம் தொகுதியில்
30—6—50ல் நடைபெறும்
சென்னை சட்டசபை தேர்தலில்
ஜனராஜ்ய கட்சி அபேட்சகர்
திரு. S. ரத்னசாமி கவுண்டருக்கு
பச்சைப் பெட்டியில்
தயவுசெய்து ஓட்போடவும்
(விளம்பரம்)

உண்ணாவிரதத்தில் உலக 'ரிகார்ட்'

பிராங்பர்ட், ஜூன் 25—

பிராங்பர்ட் உயிர்காட்சி சாலையில் ஒரு கண்ணாடி பெட்டியில் படுத்து 53 நாட்கள் ஒரு ஜெர்மானியர் உண்ணாவிரதம் இருக்கிறார். இவர் பெயர் வில்லிஷிமிட்ஸ் என்பதாம். இவர் சோடா தண்ணீரையும் சிகரெட்டையுமே இந்த உண்ணாவிரத காலத்தில் உபயோகித்து வந்தாராம்.

உண்ணாவிரதத்தினால் இவருக்கு 72 பவுண்டு எடை குறைந்துவிட்டது. 53 நாட்களுக்குமேல் தன்னால் உண்ணாவிரதத்தை நீடிக்க முடியவில்லை என்றும் அவருக்கு கடும் தலைவலி ஏற்பட்டதாகவும் அவர் கூறினார்.

வர்மா என்கிற இந்தியர் ஒருவர் இம்மாதிரி உண்ணாவிரதமிருந்தார். தன்னைப் போல் அவ்வளவு நாட்கள் அவரால் இருக்கமுடியாது என்று இவர் சவால் விடுகிறார். 53 நாள் உண்ணாவிரதமே உலகரிக்கார்டாம்.

அயரில் பெண்கள் எண்ணிக்கைகுறைகிறது

டப்ளின், ஜூன் 25—

விவசாயத்துறை இலாகாவும் சுகாதாரம் சேகரித்த குழுக்களின் விவரங்களின்படி அயரில் ஒவ்வொரு 1000 ஆண்களுக்கும், 977 பெண்கள்தான் இருந்துவருகின்றனர், நாளுக்கு நாள் பெண்களின் எண்ணிக்கை மிகவும் குறைந்து வருவதாகக் கூறப்படுகிறது.

சென்ற சென்ஸஸ் கணக்குப்படி 4 வருடங்களுக்குமுன் எவ்வளவு பெண்கள் அயரில் இருந்தார்களோ அதைவிட 10,000 பேர் இப்போது குறைவாகவே உள்ளனர். இதனால் அநேக புருஷர்கள் தங்களுக்கு மனைவி கிடைக்காமல் தவிக்க நேரிட்டிருக்கிறது.

அயரில் உள்ள குறைந்த எண்ணிக்கை பெண்களிலும் பலர் 80 வயதுக்கு மேற்பட்டவர்களாம். அயரில் பெண்கள் எண்ணிக்கை குறைவுக்குக் காரணம் அயர் பெண்களில் அநேகர் வெளிநாடுகளுக்குச் சென்றுவிட்டதினால்தான் என்று கூறப்படுகிறது.

இந்தியர் கழக கட்டிட நிதி

லண்டன் ஜூன் 25—

பிரிட்டனிலுள்ள இந்தியர் சங்கத்திற்கு கட்டிடம் எழுப்ப நிதி திரட்டும் வேலையை டார்செஸ்டர் ஹோட்டலில் ஏர்ல் மவுண்ட் பேட்டன் ஆரம்பித்து வைக்கப்போகிறார். அக்கூட்டத்தில் ஹைகமிஷனர் கிருஷ்ணமேனன், பிரிட்டிஷ் மந்திரி தனார் பேவான், [illegible] ஜாம் சாகேப், ஜெய்ப்பூர், [illegible] பரோடா, சவுராஷ்டிரா மகாராஜாக்கள் கலந்துகொள்வார்கள். [illegible]ரு 18 லட்சம் நிதி திரட்ட உத்தேசிக்கப்பட்டிருக்கிறது.

ஏஜெண்டுகள் தேவை

நமது "மாலை மணி"யை விற்பனைசெய்ய முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர் கீழ்க்கண்ட இடங்களுக்கு பொறுப்பு வாய்ந்த ஏஜெண்டுகள் தேவை.

திருச்சி, மதுரை.

மானேஜர்:—"மாலைமணி"

பெல்ஜிய காங்கோவில் பிக்மிகள் கலகம்

பிரஸ்ஸல்ஸ் ஜூன் 25—

தங்களை எல்லாம கொன்று தங்கள் மாமிசங்களை டின்களில் அடைத்து அனுப்ப வெள்ளையர் ஏற்பாடு செய்வதாக நினைத்து பெல்ஜிய காங்கோவின் தலைநகரான லியோபால் வில்லிலுள்ள பிக்மிகள் வெள்ளையர்களை வேட்டையாடியதாக இங்கு செய்தி கிடைத்திருக்கிறது.

கால்நடை மாமிசம் அடைக்கப்பட்டுள்ள டின்களில் ஒரு நீக்ரோவின் தலை 'டிரேட் மார்க்' ஆக போடப்பட்டிருப்பதினால் சந்தேகம் ஏற்பட்டே இந்த சுதேசிகள் கலகம் விளைவித்ததாகத் தெரிகிறது.

பாயிட் என்கிற ஜெக்கோஸ்லாவிய சிற்பி ஒருவர் இவர்களிடம் தன் மனைவியுடன் அகப்பட்டுக்கொண்டார். கங்களை கொல்ல வழி தேடும் கோஷ்டியின் தலைவர் அவர்தான் என்று பிக்மிகள் கருதி அவர் காரைச் சுற்றிக் கொண்டுவிட்டனர். ஆனால் அவர் எப்படியோ தப்பிவிட்டார். பாயிட் தன் இடத்தில் வைத்துள்ள உருவச் சிலைகளை இறந்துபோன சுதேசிகள் என்று பிக்மிகள் கருதியிருக்கலாம் என்று தெரிகிறது. (ருனோப்)

காகிதக் கட்டுப்பாடுகள் நீங்கின

புதுடில்லி, ஜூன் 25—

நாளை முதல் காகிதக் கட்டுப்பாடுகள் யாவும் அகற்றப்படும் என கைத்தொழில் சப்ளை இலாகா இன்று அறிவித்தது.

இந்தியாவில் காகித உற்பத்தி அதிகரித்திருப்பதுடன் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி அதிகரித்திருப்பதை யொட்டி இப்படி தீர்மானிக்கப்பட்டது.

பத்திரிகைக் காகிதத்தின் மீதிருந்த கட்டுப்பாட்டை சென்ற ஆண்டு ஜூன் 24-ந் தேதியும், உற்பத்தியின்மீதும் இறக்குமதி காகித விலைமீதும் உள்ள கட்டுப்பாட்டை 1950 மே 1-ந் தேதியும் சர்க்கார் நீக்கினர்.

Printed & Published by T. M. Parthasarathy at the Mercantile Press, 2/45, Muthumari Chetty St, Madras-1.